**Crl. Misc.39**

**Pg.154/2024**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**DVC 60/2022**

**Deposition of Witness : RW1**

| Name | **அன்பழகன்** | Taluk | |
|---|---|---|---|
| Fathers Name | **ராஜு** | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 02.04.2025** | | | |

**குறுக்கு விசாரணை**

1) நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் ஐடிஐ படித்துள்ளேன். என்ன வேலைக்கு செல்கிறேன் என்றால் செல்போன் கடையில் வேலை பார்த்து வருகிறேன். நான் வட்டி தொழில் செய்து வருகிறேன் என்றால் இல்லை. நான் தினவட்டிக்கு கொடுத்து தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எங்களது திருமணம் காதல் திருமணம் என்றால் சரிதான். திருமணத்தில் எனது அம்மாவுக்கு விருப்பம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தற்கொலை பண்ணிகொள்வேன் என்றுமிரட்டிதான் என் அம்மாவை திருமணத்திற்கு சம்மதிக்க வைத்தேன் என்று சொன்னால் சரியல்ல. எங்களது திருமணம் இந்து முறைப்படிதான் நடந்தது என்றால் சரிதான். அதன் பின்னிட்டு வளைகாப்பு இந்து முறைப்படித்தான் நடந்தது.

2) குழந்தைக்கு இந்து பெயர்தான் வைத்தோம் என்றால் சரிதான். வளைகாப்பின்போது மனுதாரர் பெற்றோர் ராசியாகி விட்டார்கள் என்றால் மனுதாரரின் தகப்பனார் மட்டும்தான் வந்தார். எனது பிரமாண வாக்குமூலத்தில் நானும், மனுதாரரும்

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ), கரூர்.

பிரிந்து வாழ்ந்த காலகட்டத்தில் சமரசம் யார் மூலமாக பேசினேன் என்றால் என் தாய்மாமன் மூலமாக பேசினேன். அவரை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்க விருப்பமா என்றால் தயாராக உள்ளேன். ஓடமுடையார் பாளையத்தில் உள்ள வீடு எனது சொந்தவீடு என்றால் சரிதான். மேற்படி வீட்டை திருமணத்திற்கு பின்பு கட்டினேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னிட்டு 2019ம் ஆண்டு ராயனூரில் தனிக்குடித்தனம் சென்றோம் என்றால் சரிதான். எனது அம்மா , மனுதாரரிடம் வரதட்சணை கேட்டு கொடுமை செய்ததால்தான் தனிக்குடித்தனம் சென்றோம் என்றால் சரியல்ல. மனுதாரரை மத ரீதியாக கொடுமைப்படுத்தினார் என்றால் சரியல்ல.

3) எனது அம்மாவிற்கு என்னை சொந்தத்தில் திருமணம் செய்து கொடுக்கவேண்டும் என்று ஆசை இருந்தது என்றால் சரியல்ல. 2019ம் ஆண்டு தனிக்குடித்தனம் சென்றபோது மனுதாரரின் பெற்றோரிடம் வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கி கொடுக்குமாறு கேட்டேன் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரரை பலமுறை ரத்தம் வர அடித்து கொடுமைப்படுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரரிடம் ஆபாச படங்கள் காண்பித்து அதைபோல் தாம்பத்ய உறவு வேண்டும் என்று கட்டாயப்படுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல. 2021ம் ஆண்டு கர்ப்பப்பை அறுவை சிகிச்சை செய்துகொண்ட விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

4) நான் மனுதாரரை வயிற்றில் அடித்ததால் தான் கர்ப்பப்பை திரும்பியது என்றும், அதனால்தான் அறுவை சிகிச்சை செய்து கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. 08.03.2020ம்தேதி மனுதாரரை அடித்து அவருடைய கை விரலை உடைத்தேன் என்று சொன்னால் சரியல்ல. மருத்துவமனையிலும் உண்மை சொல்ல கூடாது என்று சொல்லி, மாடியில் இருந்து கீழே விழுந்ததாக பொய் சொல்ல வைத்தேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் இடைக்கால ஜீவனாம்சம் கொடுக்க வேண்டும் என்று உத்தரவு போட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி விவரம் தெரிந்தபின்பும் நீதிமன்றத்தை மதிக்காமல் மனுதாரரை அலைக்கழிககவேண்டுமென்ற நோக்கத்தில் ஜீவனாம்சம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. சரியான

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ), கரூர்.

வேலை இல்லாததால் கொடுக்க முடியவில்லை.

5) 24.07.2022ம்தேதி நான் மனுதாரரின் வீட்டிற்கு சென்று ரூ. 2 லட்சம் பணமும், 40 பவுன் நகையும் கேட்டு அடித்து துன்புறுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல. மனுதாரரை பல்வேறு முறை மத ரீதியாகவும், வரதட்சணை கேட்டும் துன்புறுத்தினேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் வாய்தாவிற்கு வரும்போது மனுதாரரை பின்தொடர்ந்து சென்று தொல்லை கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. 3 மாதத்திற்கு முன்பு மனுதாரரை பின்தொடர்ந்து சென்றதாக மனுதாரர் புகார் கொடுத்திருந்தார் என்று சொன்னால் சரிதான். மனுதாரர் தன்னுடைய 8 வயது குழந்தையை பராமரிக்க கஷ்ட ஜீவனம் செய்து வருகிறார் என்று சொன்னால் எனக்கு சரியான வேலை இல்லை. என் மகனை பார்க்க தயாராக உள்ளேன். நான் தற்போதும் சேர்ந்து வாழ தயாராக உள்ளேன். நான் திருந்தி சேர்ந்து வாழ வந்தபோதெல்லாம் மனுதாரரை அடித்து துன்புறுத்தினேன் என்றால் சரியல்ல. மனுதாரர் ஒவ்வொரு முறை சேர்ந்து வாழுவதாக சொல்லி வந்து அவரது சான்றிதழ்களை எடுத்து சென்றுவிட்டார். மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/–R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ), கரூர்.